# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

நாள். 21.01.2019

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600009.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, வணக்கம்.

தமிழ் நாட்டில் அரசுப்பள்ளிகளில், அரசுத்துறைகளில் பணிபுரியம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்கள் ஆகிய நாங்கள் கடந்த பதினைந்து வருடங்களாக எங்களது நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வருகிறோம். எங்களின் போராட்டங்களில் உள்ள நியாயங்களை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா என்று தெரியவில்லை. ஒருவேளை இந்தக்கடிதம் அதைத் தங்களுக்கு உணர்த்தக்கூடும். போராட்டங்கள் எங்களுக்கு ஏன் தவிர்க்க இயலாததாகி உள்ளது என்பதை இந்தக் கடிதத்தைப் படித்து முடிக்கும்போது தாங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறோம்.

இந்தியாவில் பிற மாநிலங்களில் அரசுத்துறைகளில், அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் அரசுஊழியர்கள், ஆசிரியர்கள் பணியாளர்கள் துய்க்கின்ற உரிமைகளைத்தான் நாங்கள் தமிழக அரசிடம் கோருகின்றோம். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அறிவித்துவிட்டு, அடிப்படை சம்பளம் தவிர்த்து மற்ற அம்சங்களில் மிகுந்த பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இடைநிலை ஆசிரியர், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் போன்ற சில பிரிவினருக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் இன்றுவரை நிர்ணயிக்கப்படவில்லை. இதைப்போலவே ஊதிய மாற்றங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைச் சரிசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையைச் சென்ற ஊதிய மாற்றத்திலிருந்தே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என அரசு அறிவித்தது பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது. அதைப் பரிசீலித்து நல்லதொரு முடிவு எடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டு வருகிறோம். புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என தங்கள் கட்சியின் 2011 தேர்தல் அறிக்கையிலேயே உத்தரவாதம் வழங்கப்பட்டு ஆட்சிக்கு வந்தபின் நான்கு ஆண்டுகளாக மௌனம் காத்ததும், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டங்களை முன்னெடுத்த பின்னர் வல்லுநர் குழு அமைத்து மூன்று ஆண்டுகளாக அதன் காலம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருவதுமான அம்சங்கள் எங்களைப் போராட்டக் களத்திற்கு இழுத்து வந்துள்ளது.

# ஜாக்டோ – ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் தீர்க்கப்பட வேண்டிய கோரிக்கைகள் நூற்றுக்கணக்கில் இருந்தபோதிலும், அடிப்படையில் மிக மிக முக்கியமான சில அம்சங்களை மட்டும் தமிழக அரசிடம் இருந்து இப்போதைக்கு வலியுறுத்தி பெறலாம் என்று நாங்கள் எங்கள் கோரிக்கைகளை ஒன்பதாக சுருக்கியிருக்கிறோம். அந்த ஒன்பது அம்ச கோரிக்கைகளை சுருக்கமாக தங்களின் மேலான கவனத்திற்கு வைக்கிறோம்.

1. 01.04.2003க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தைக் கைவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல் படுத்திட வேண்டும்.
2. இடைநிலை ஆசிரியர்களுக்கும்,உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டுவரும் அநீதி களையப்பட வேண்டும்.
3. முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர், களப் பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும்.கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணி மேம்பாடு (CAS) உடனடியாக வழங்கிட வேண்டும். மேலும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களைப் பட்டதாரி ஆசிரியராக உட்படுத்த வேண்டும்.
4. சிறப்புக் காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் சிறப்பு ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் பலநோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
5. 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனே வழங்கிட வேண்டும்.
6. 2003, 2004 மற்றும் பல்வேறு காலகட்டங்களில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பணியாளர்களின் பணிக்காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்.

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

7. அரசாணை எண்.56ல் இளைஞர்களின் வேலை வாய்ப்பினைப் பறிக்கின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்கள் பகுப்பாய்வுக் குழுவினை இரத்து செய்ய வேண்டும். மேலும் பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ள அரசாணை எண்கள்.100 மற்றும் 101 ஆகியவற்றை இரத்து செய்ய வேணடும். 5000 அரசுப்பள்ளிகள் மூடுவதை உடனடியாகக் கைவிட்டு, சமூக நீதியினைப் பாதுகாத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. 3500 தொடக்கப்பள்ளிகளை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுடன் இணைக்கும் முடிவினையும், 3500 சத்துணைவு மையங்கள் மூடும் முடிவினையும் ரத்து செய்ய வேண்டும்.

9. அங்கன்வாடி மையங்களில் LKG/UKG வகுப்புகளுக்கு மத்திய அரசின் முடிவின்படி புதிய மாண்டிசோரி பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு மாறாக தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை பணிமாற்றம் செய்வதை ரத்து செய்ய வேண்டும்.

மேற்கண்ட ஒன்பது கோரிக்கைகளில் உள்ள எங்களின் நியாயமான உரிமைகளை, மக்களின் நலன் காக்கும் இந்த அரசு மறுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம். இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் அரசுப்பள்ளிகள் மற்றும் அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும். அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்களும் பணியாளர்களும் அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்களும் முழுமையான அளவில் நியமிக்கப்பட்டு பணி செய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு மத்திய அரசுக்கு இணையான உரிமைகளும் ஊதியமும் வழங்கப்பட்டால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்ட களங்களை துறந்துவிட்டு மக்களுக்கான பணியையும் மாணவர்களுக்கான பணியையும் செய்து இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற உழைப்பதுடன் சமுதாய மேம்பாட்டையும் பேணிக்காப்பதில் தீவிர கவனம் செலுத்துவோம் என்பதில் ஐயமில்லை. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய மேற்கண்ட கோரிக்கைகளை, கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை புரிந்து கொண்டு, குழுக்களுக்கு மேல் குழுக்கள் அமைத்து குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்த்து எங்கள் பிரதிநிதிகளை நேரடியாக அழைத்துப் பேசி குறைகளை நேரடியாகக் கேட்டு எங்களுக்குரிய உரிமைகளை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவண்,

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஜாக்டோ - ஜியோவுக்காக

**மாநில ஒருங்கிணைப்பாளர்கள்**